

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

நௌகாசரிதமென்னும்

# கண்ணன் லீலை

# காக்ஷியோடக்கும்மி

இவை

ஸ்ரீரங்கம்.

ரங்கநாயகி அம்மாளால்

இயற்றப்பட்டது.

SEVENTH EDITION

திருச்சி

லக்ஷ்மி விலாஸ பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1925.

*Copy Right Registered* விலை அண 0—3—6.

செங்கம்

ஸ்ரீ கிருஷ்ணாயபரப்பிறம்மணே நமஹ:

செங்கம்புஸ்தகம்

# கும்மி.

தெள்ளுதமிழுக்குதவுசீலன் என்னும் காவடிச்சிந்தின் மெட்டு.

## கண்ணகோபியர் ஓடலீலை கும்மி 1-வது

மங்கை கோபியருடனே கூடி—கண்ணன்
மகிழ்ந்து ஓடத்தில் விளையாடி
தங்கிய சரித்திரத்தை சங்கையில்லாமலுரைக்க
நாடி யருள் தேடி 1

ஆசையாய் பதின்மர்பாதம் போத்தி—எதி
ராசர் அடியிணைமலர் ஏத்தி
தேசுபரும் வேதாந்த தேசிகரடிமலரை
வாழ்த்தி துதி சாத்தி 2

தாகமுடனடைந்தேன் இப்போதே—க்ஷீர
ஸாகரந்தனில் உதித்த மாதே
நாக சயனத்தில் துயில் மோகன ரெங்கேசர் மகிழ்
கோதே யருள் பேதை 3

பொங்குபுகழ் பொன்னரங்க நாதா—தினம்
லங்கை மன்னன் வணங்கும் பாதா
கங்கையணி சங்கரனும் பங்கயனும் பணிவேத
வேதா அருள் நீதா 4

அன்புடனே பரிக்ஷித்து ராஜர்—சுகர்
என்பவரை வணங்கியத் தேஜர்
இன்புறுதும் சிந்தையுடன் என்பெருமான் கண்ணன்கதை
கேழ்ப்பார் செவி தாழ்ப்பார் 5

## வேறு கும்மி 2.

கோடிமனோஜா என்னும் பார்ஸி மெட்டு.

கோடிமன்மத சமானரூபன் கதை
கூறும் மஹாமுனியே கோடி 1

K. வயிரவ பிள்ளை
புஸ்தகம், படம், வியாபாரம்
புதுமண்டபம், மதுரை.

K. காசிவிஸ்வநாத பிள்ளை,
புத்தகசாலை, புதுமண்டபம்,
மதுரை

நாடியுள்ளந்தன்னில்-நாரணனை முன்னில்
நாடும் சுகமுனியே கொண்டாடும் சுகமுனியே 2

அல்லல்வினை தீரும் அன்புடனே காரும்
நல்ல வாஸுதேவன்கதை சொல்லவேணுமிப்போததை 3

கோவியர்கள்கூடி கோவிந்தனை நாடி
கொண்டாடியழைத்ததுமே நன்றாக உரைத்திடுமே 4

ஓடமதின்மேலே கூடமாதர்பாலே
உண்டான லீலைதன்னை தொண்டாள் எந்தன்முன்னே 5

## வேறு கும்மி 3

ஆண்டவன் மித்திரன் என்னும் மெட்டு.

பாலகோபாலன் லீலையைக்கேளும்
பரிக்ஷித்து மகிபாலா 1

சீலகுணகம்பீரனே வீரா
ஜகத்திற்கு அனுகூலா இந்த ஜகத்துக்கு அனுகூலா 2

கோலமுடைய சிறு பாலயுவதியர்கள்
கோபியர்கள் கூடி ஓரிடம்
நீலவர்ணனுடைய நேசத்தை நாடி
நினைத்துமே கொண்டாடி பெண்கள் நினைத்துமே கொண்டாடி 3

கூடியுகந்தார் கோகுலந்தன்னில்
கும்பல்களாய்ச் சேர்ந்தார் கோபியர்
ஈடில்லை எந்தனுக் காருமென்றெண்ணி
எல்லவரும் தேர்ந்தார் பெண்கள் எல்லவரும் தேர்ந்தார் 4

அஞ்சுலக்ஷம் இடவஞ்சியர் கோபியர்
அனைவரும் கூடிக்கொண்டார் அன்புடன்
மிஞ்சியே மெச்சிதன் வடிவழகினைமிக
மேலென நினைத்துவிண்டார் அழகினை மேலென நினைத்துவிண்டார் 5

## வேறு கும்மி 4.

காதேன்னிலே கட்டின என்னும் கும்மி மெட்டு.

பல்லவி.

கோவியர் தன் கோகுலத்தில் கூட்டங்கூடினள்
பாவித்தவர் அழகினைக்கொண்டாடிப்பாடினள் கோ 1

அனுபல்லவி.

பாவையரே எந்தனைப்போல் பூவையர்கள் மூவுலகில்
யாவரடி எந்தனுக் கீடாவரடி என்றுரைத்து கோ 2

சரணங்கள்.

இந்திரன்புமைவாணி என்னழகாமோ அடி
சந்திரன்பாரியுமெனக்கு ஸம்மதமாவாளோ
இந்திராணிமேதினியும் ஈடில்லாத என்னுடைய
சுந்திரவடிவுக்கீடோ சொல்லடி என்றேயுரைத்து கோ 3

கண்ணனென்னைக்கண்டுவிட்டால் கலங்குவானடி மணி
வண்ணனென்னைப் பார்த்துவிட்டால் மயங்குவானடி
வெண்ணைதந்தா லென்னிடத்தில் வேணவிச்வாசமடி
உண்மையுள்ள பிரீதியடி உருதியடி என்றுரைத்து கோ 4

பச்சைவண்ணன் பக்ஷமெந்தன் பங்கடி என்பாள் அதி
இச்சைமிக என்னிடத்தில் இருக்கடி என்பாள்
அச்சுதன் என்னழகைக்கண்டால் ஆசைமிக அதிகமென்பாள்
உச்சுதமா என்னைமிக உகப்பனடி என்றுரைத்து கோ 5

கூடித்தங்கள் அழகினைக் கொண்டாடும் பெண்களை கூவி
மேடியுள்ள கோபியொருவள் மேலும்புகழ்வளே
போடிபோடி கண்ணன்நம்மை நாடி யொருநாளாகிலும்
வாடிஎன் றுவலுவில்நம்மை வந்தழைத்தாரோடிஎன்றாள் கோ 6

## வேறு கும்மி 5.

சுத்திவந்து கும்மியடித்தாள் மெட்டு.

வந்தொருநாள் அழைத்ததுண்டோ வலுவில் கண்ணன்
வந்தொருநாள் அழைத்ததுண்டோ 1

அந்தரங்கப் பிரீதிகொண்டு சுந்திரவடிவைக் கண்டு
சிந்தையினில் மையல்கொண்டு சேரவெண்ணி வந்து 2

என்னடி கண்ணனைமிக இச்சையென்றுரைக்கிறீரே
முன்னமொரு நாளேனும் மோகங்கொண்டு வந்து 3

காதல்கொண்டு யாரொருநாள் கண்ணனையழைக்கவிட்ட
தூதியுடனே புணர்ந்தான் அதன்னிநம்மை வந்து 4

என்னைவரச்சாடைகாட்டி இன்னொருத்தி தன்னைக்கூட்டி
உன்னையழைத்திருட்டில் விட்டு ஓடினதன்னி வந்து 5

இத்தனைபேர்கள் நமக்குள் ஒத்திருக்கும் மெய்யனில்லை
மெத்தப் பிரீதி எனவுரைத்தீர் மேகவண்ணன் வந்து 6

ஆசைகொண்டு கண்ணன் இனி அன்புடனழைக்காவிட்டால்
நேசித்தினிப்போகவேண்டாம் கண்ணனிடம் வந்து 7

இந்தப்படி பேசியந்த சுந்தரியர்போனபின்பு
நந்தகோபாலனப்போ இதையறிந்தோர்
விந்தை செய்தார் கேளுமய்யா பரிக்ஷித்தனே வந்து 8

## வேறு கும்மி 6

ஈவேள நலுகூகு லேச்சிரு என்னும் மெட்டு.

ஆயர்சேரியர் அறிந்திடாமலும்
அன்னை தந்தையர் தெரிந்திடாமலும்
நேயகோபியர் நெஞ்சங்கவர்ந்திட
மாயவன் குழல் கொண்டூதுறார் பவள
வாயவன் குழல் கொண்டூதுறார் 1

சிறுவிரல்களக் குழலைத்தழுவிட
சங்கமலக் கண்சாய்ந்திட
குருவியர்வியர்க்கப் புருவம் நெளிந்திட
கோவலன் குழல் கொண்டூதுறார் அதி
பாவலன் குழல் கொண்டூதுறார் 2.

சுருண்டுருண்ட குழல்களசைந்திட
சுந்திரமுகம் துலங்கிட
மருண்டுமானினம் மேய்கை மறந்திட
மாதவனகுழல் கொண்டுதுறார் எங்கள்
யாதவன் குழல் கொண்டூதுறார் 3

பறவைகூடுவிட் டோடிப்பறந்திடப்
பாம்புபுத்து விட்டாடிட
கறவைகன்னினம் மேய்கைமறந்திட
கண்ணன் குழ லெடுத்தூதுறார் மணி
வண்ணன் குழ லெடுத்தூதுறார் 4

அம்பரந்தன்னில் கிம்புருடர் கூட
தும்புரும் கீதம் துறந்திட
ரம்பை ஊர்வசி ஆடல் மறந்திட
எம்பிரான் குழலூதுறார் தேவா
தம்பிரான் குழலூதுறார் 5

கோவிந்தன் குழல் கீதநாதமக்கோ
வியர்செவி கேட்டிட
ஆவல்கொண்டவர் திரேகம் மறந்திட

மோகங்கொண்டிட வேகமாய்வர
கானம்செய்குறார் கண்ணனும் வேணு
கானம் செய்குறார் கண்ணனும் 6

## வேறு கும்மி 7.

காலேகன்றுகள் மேய்த்தார் கண்ணன் மேட்டு.

ஸ்ருங்காரம் செய்துகொண்டு
சீக்கிரம்வாராள் சிலகோபி
பங்கயக் கண்ணனைப் பார்த்திட எண்ணியே
மங்கையர் கூடி மகிழ்வுடன்னுேடி ஸ்ரீ 1

காலிலிடும் நகை காதிலிட்டாள்
பீலியை மூக்கினில் வாங்கியிட்டாள்
தாலியைத் தன் முழங்காலில் மாட்டி
கோலியே வேகமாய்க் கண்ணனிடம் ஸ்ரீ 2

பட்டாடைதன்னை கழுத்தில்கட்டி
பாங்குடன் ரவிக்கையை இடுப்பில் சுத்தி
ஒட்டியாணத்தை தலையினில் மாட்டி
ஓடியே வாராள் சிலகோபி ஸ்ரீ 3

ஜாடையாய்க் கண்ணன் குழலோசை சில
சவுந்தரி கேட்டுடன் மெய்மறந்து
ஆடையவிழ்ந்ததை அரியாமல் வெகு
அவசரமாய் வாராள் சில கோபி ஸ்ரீ 4

கோவிந்தன் குழலின் நாகமந்தக்
கோவியர் கேட்டுடன் மெய்மறந்து
ஆவலாயெதிர்த்திடும் ஆளைமிறட்டி
காவல் நடந்துவாராள் சில கோபி ஸ்ரீ 5

கருமுகில் வண்ணன் குரலோசை சில
காதலி கேட்டுடன் மோகமதாய்
அருமையாய்பெற்ற மைந்தனை எறிந்து
அலங்கோலமாய் வாராள் சிலகோபி ஸ்ரீ 6

மாதவன்கீதா வலேயினிலே
மதிமயங்கி கோபிபந்த
மாதர்கள் கண்ணுக்கு வழிதெரியாமல்
மதிலேரிவிழுவாள் சிலகோபி ஸ்ரீ 7

கோபியரனைவரும் கூடிகொண்டார்
கும்பல்களாய் ஒன்று சேர்ந்துகொண்டார்
கோவிந்தனைமிகத் தேடிக்கொண்டெல்லோரும்
கூப்பிட்டுவாராார் யமுனைக்கறை ஸ்ரீ 8

யமுனாநதியின் கரையேலே
இருக்கும் சோலை மலைக்குகைகள்
எங்கிலும்தேடிக் கண்ணனைக்காணமல்
ஏங்கி எல்லோருமாய் தேங்குகிறாள் ஸ்ரீ 9

## வேறு கும்மி 8.

துலுக்கு வாரங்காணலியோ ராஜஸகிமா மெட்டு.

மங்கையரே கானேனடி மதனகோபாலன்
மாதர்கள் லோலன் மங் 1

பங்கயம்போல் கண்ணனடி பச்சைநிறவண்ணனடி
துங்கருக்குள் எண்ணடி துரையென் கோபாலன்
நிறைகுணசீலன் மங் 2

கண்ணன் மணிவண்ணனடி காக்ஷியுள்ளரூபனடி
எண்ணனடி இன்பனடி ராசகோபாலன்
நேசர்கள் லோலன் மங் 3

வெண்ணையுண்டவாயனடி மண்ணையுண்டமாயனடி
விண்ணவர்கள் நேயனடி விஜயகோபாலன்
விஜயர்தன் லோலன் மங் 4

கோகுலத்தில் வாஸனடி கோபியர்கள் நேசனடி
ஆகுலங்கள் தீர்ப்பனேடி ஆசைக்கோபாலன்
தாஸர்கள் லோலன் மங் 5

## வேறு கும்மி 9.

அனுமாருக்குச் சூடாமணி கொடுத்த மெட்டு.

மதனகோபாலனைத்தேடி கோப
மங்கையர் காணமல் வாடி
மதனன்வாணம் மனதைக்கவர
மாதர்கண் மையல் கொண்டோடிவந்தார் 1

கோகுலத்தினில் இருப்பானே நாம்
கோரும் ஸுகங்கள் கொடுப்பானே
வாரிஜநாபனைக் காண்போமோ என்று
கோரியே கோகுல மோடிவந்தார் 2

பாலகோபாலன் கண்ணனப்போ சில
பாலர்களுடனே பந்தாடி
கோலமுடன் எதிர் கூவிவருமந்தக்
கோபியரைக்கண்டு உள் நுழைந்தார் 3

இருகை நிறையமுது படி
　எங்கிலும் சிதற வாரிக்கொண்டார்
தெருவில் கூவிடும் நாவல்பழம் வாங்க
　தேவகிசேயனு மோடிவந்தார் 4

சுந்திரமதிமுக மதிலே
　சுருண்டிருண்ட குழலசைய
நந்தனருமைக் குமாரனப்போ
　நாவல்பழங்கூவி வீதிவந்தார் 5

தண்டை சிலம்புகள் சப்தமிட
　தாமரைமுகத்தில் வேர்வைவிட
கொண்டல்வண்ணன் வரக்கண்டவுடனந்த
　கோபியர்கள் மிக்க ஆவலுடன் 6

கண்ணனைச்சுத்தி வளைந்துகொண்டார் தம்
　காதலைமிக்க வியந்துகொண்டார் மணி
வண்ணனைமாதர்கள் ஜாடைகள் காட்டி
　மறைவாக நின்றப்போ கோருகிறார் 7

## வேறு கும்மி 10 நோட்.

கமலநயன கமலவதன கமலசரண வா வா.

கமலநாபாவா கமலைநாதாவா
கம்ஸமர்த்தன காளிங்கநிர்த்தன
கோகுலவர்த்தன கோவர்த்தனோத்தன வா வா க 1

நந்தகுமாரனே வா நவநீதசோரனே வா
கந்தர்ப்பனைப்பெத்த தந்தையென மெத்த
உந்தனையேபத்த வந்தடைந்தோமுத்த வா வா க 2

தேவகி பாலனே வா தேவானுகூலனே வா
தேவதேவர் துதி தேவர்க்கதிபதி
தேவியுமாபதி மேவித்தொழும் நிதி வா வா க 3

கண்ணேயுருகுறோம் வா வெண்ணை தருகிறோம் வா
தண்ணந்துழாயணி கண்ணனே என்மணி
வண்ணனெப்பணி பெண்ணிகருமணி வா வா க 4

## வேறு கும்மி 11.

ஸாறஸஸமமுக என்னும் மெட்டு.

ஏதடி நீங்கள் இங்கு வந்தழைக்குறீர்
　இந்த வேளையிலுங்கள் சிந்தை கலங்கி என்னே ஏத 1

அனுபல்லவி.

பாதியாட்டந்தன்னில் பழம்வாங்கவந்த என்னோட்
　காதல்விண்டு என்னைக் கண்டு சூழ்ந்துகொண்டு ஏத 2

சரணங்கள்.

உத்தமி கோபியரே பர்த்தாவை விட்டுவரலாமோ
மத்தொரு புருஷனை மனதில் நினைத்திடவும்போமோ
சித்தசன்பாணத்தில் சிக்கினேன் என்று நீங்கள்
இத்தனைபேரும் பெரும்பித்து பிடித்தவர்போல் வத 3

கோபியரே உங்களோடு கூடி நான் பேசுவதைக்கண்டால்
கோபித்து அன்னையர் அசோதையடிப்பாளென்னைசண்டால்
மேவி என்னை நீங்களும் கூவிக்கணவன் போல
பாவித்தழைக்குறீரே பாவமுங்கட்கல்லவோ வத 4

இந்துவதனமதி சுந்தரவதி நீங்கள் கூடி
வந்துமருவவென்றி வலிய அழைக்கலாகுமோடி
சொந்த பந்துக்களுடன் உந்தன் கணவன்முதல்
தந்தைநந்தரறிந்தால் நிந்தைக்கிடமாகுமே வத 5

வெண்ணை தயிர் பால் எந்தன் வீட்டினில் கிடையாதோ
அண்ணனுடனே நான் அமுது செய்ததை அரியாதோ
பெண்ணே நீங்களெல்லோரும் உண்மையறிவிழந்து
கண்ணு கண்ணுவென்று கண்ணைக்காட்டிக்கெஞ்சி வத 6

## வேறு கும்மி 12.

பாளைவாய் சமுகில்வந்தூர் என்னும் காவடிச்சிந்தின் மெட்டு.

கண்ணன் சொன்ன வார்த்தையந்தப்
பெண்மணிகள் கேட்டுமுந்த
வண்ணமணி வாய்திறந்து கோருவள் மணி
வண்ணனே கதிநீ யென்று கூறுவள் 1

காதல்கொண்டிப் போதுவந்த
பேதையான மாதர்கள்மேல்
சூதுசெய்தால் எங்கதி மாதவா இந்தப்
போது ஒதுகோதிலாத யாதவா 2

ஸாறஹீனமான பெருங்
கோடஸமுஸார டவ
ஸாகரங்கடந்து வந்தோ மையனே உந்தன்
மோகமதடைந்து நைந்தோ மெய்யனே 3

கன்னல்வில்லி மாறன்முன்னே
அன்னிதம் செய்வாயோ என்னை
உன்னை நம்பியோடிவந்தோம் உத்தமா நாதா
இன்னமும் சோதிப்பதுந்தன் சித்தமா 4

பாம்பின்மேல் நடனம் செய்த
பாலகோபாலா ஏழைமேல்
வீம்புசெய்தால் வேறுதுணை யாரையா ஏழை
தேம்பிடாமல் இனிவந்து காரையா 5

அஞ்சிக்கெஞ்சி கொஞ்சியுந்தன்
தஞ்சமென அஞ்சலி செய்
வஞ்சியர்மேல் கஞ்சமலர்க் கண்ணனும் மிக
நெஞ்சிறங்கி நீலமணி வண்ணனும் 6

## வேறு கும்மி 13.

### நவராத்திரிக்கும்மி வர்ணமெட்டு.

கோவியருறைக்கு கந்துகோவிந்தனும்
கூடியமுனையை நாடிவந்தார் கோ 1

அனுபல்லவி.

பாவித்துப்பாவலர் நாவலர் யாவரும்
யேவித்துதித்திடும் தேவகிபாலனும்
சேவித்துக்கூவிடும் பாவையர்களுடன்
கூடியே பண்பாடியே கொண்டாடியே கூத்தாடிக் கோ 2

மாங்குயில் கூவிடும் சோலைகளும் புள்ளி
மானினமோடும் நல் சாலைகளும்
பூங்குயில் பாடிடும் ஓடைகளும் நல்ல
பெண்மயிலாடிடும் மேடைகளும்
பாங்குடனே பெண்கள் பாலகிருஷ்ணன் கரம்
பத்திமிகச் சத்தியவந் தத்திமித் தோமெனக் கோ 2

கூடி எல்லோரும் யமுனைவந்தார் அதின்
வேடிக்கைகண்டு மிகவுகந்தார்
கோடி ரவிஸம கோகுலநாதனை
மேடியதாக நடுவைத்தப்போதனை
பாடியுசேனியை பண்புடன் யமுனை
பார்த்துமிகப்போத்தியதின் நேத்தியதை சாத்தியக்கோ 4

## வேறு கும்மி 14.

### ஆல்றடி ஜனரல்வே மெட்டு.

பொங்கும் யமுனாநதிக்கரை மங்கையர்கூடி
தங்கும் பெருங்காக்ஷிபதனைத் தனித்தனிப்பாடி 1

பங்கயங்கள் பூத்திருக்குது பாரடி என்பாள்
செங்கழுநீர் செழித்திருக்குது சீரடி என்பாள் 2

அவ்வல்லியில் அன்னம்பெட்டையோ டாடுதே என்பாள்
செவ்வல்லியில் வண்டுகூடிப் பாடுதே என்பாள் 3

அலைபோது சுழிசுழிக்குது ஆழம்பாரென்பாள்
நிலையேதிதில் மகரமலயம நிறைந்ததோரென்பாள் 4

ஓடிவாடி இங்கிலொரு ஓடங்காணேனென்பாள்
ஈடில்லை இவ்வோடதத்திற்கெங்கும் ரத்னப்பூணென்பாள் 5

இந்திரன் விமானமும் இதற்கேற்குமோ என்பாள்
இந்திரரை யுமைவாணியு மிதைப்பார்க்குமோ என்பாள் 6

ஜோராய் இந்தவோடத்தில் நாமேறுவோ மென்பாள்
வாராய் சொந்தத்தோழியருக்கு கூறுவோமென்பாள் 7

## வேறு கும்மி 15.

அய்யா முருகேசா என்னும் மெட்டு.

எல்லவரும் கூடி ஏறிடுவோம் வாடி நாம் எ 1

வாடி வாடி தோழியரே கூடிவிளையாடி இந்த
நீடிறைசூழ் ஆடெமுனை நாடியந்த ஓடமுந்த எ 2

துஷ்டன் மிகுமுரடன் கண்ணன் துன்மார்க்கம்செய்திடுவன்
கிருஷ்ணனை நாமிங்குவிட்டு இக்ஷணமே ஒன்றுபட்டு எ 3

தாயின் முலைப்பாலிருக்கத் தவிழ்த்துமனம் வேறுபட்டு
பேயின் உயிர்போகவுண்ட பித்தனை நாமிங்கு விட்டு எ 4

துள்ளுமிளங் கன்றுகளை மெள்ள அவிழ்த்தோட்டிவிட்டு
உள்ளிருந்த பாலுருட்டும் கள்ளனை நாமிங்குவிட்டு எ 4

வஞ்சியர் தம் சேலைகளை வாரிமர மேறிவிட்டு
அஞ்சிநம்மைக் கெஞ்சவைத்த வஞ்சகனை இங்குவிட்டு எ 6

கோபியர்கள் கூறுமொழி கோவிந்தனும் கேட்டுமப்போ
பாவித்தவர் பாவனைப்போல் பாவையரைப்பார்த்துரைப்பார்
கேளும் மகாராஜா கீர்த்தியுள்ள தேஜா எ 7

## வேறு கும்மி 16.

பத்மினிமாம் பாஹீகமலே என்னும் மெட்டு.

உங்களுடன் யானும் வருவேன் கோபியரே
உங்களுடன் யானும் வருவேன்
ஓடமதிலே நாடி மகிழ்வாய் கூடிவிளையாடி
நீடிறைசூழ்ந்திடும் ஆடெமுனைநதி
வேடிக்கை பார்த்திருந்து கோபியரே உங் 1

மங்கைமயிலே பொங்குங்குயிலே
　　தங்கநிறத்தாளே
பொங்கி மகிழ்வுடன் தங்கி யவ்வோடத்தில்
　　அங்கொரு மூலையிலே　　　　கோபியரே உங் 2

அன்னநடையே மின்னல் கொடியே
　　துன்னுமிடையாளே
தன்னந்தனியே யிங்கு என்ன செய்வேனடி
　　சின்னஞ்சிறிய பாலன்　　　　கோபியரே உங் 3

பாலின்மொழியே சேலின் விழியே
　　நீலநிறத்தாளே
கோலமுடைய சிறு பாலனிங்குதனியே
　　ஓலமிடுகுவேனே　　　　கோபியரே உங் 4

## வேறு கும்மி 17.

### சோக்காலங்காரத்தின் மெட்டு.

ஓடமதில் ஏறியிப்போ உங்களுடன் வேடிக்கையாய்
　　கூடலரேன் என்றுரைக்கும் கோவிந்தனைப்பார்த்துப்பெண்கள்
துஷ்டனடா உன்னை நாங்கள்
　　இஷ்டமதாய் ஓடந்தன்னில்
கிட்டவைத்தால் எங்களுக்கு
　　கேடு செய்வாய் எப்பொழுதும்　　　　1

முன்னே எங்கள் சேலைதன்னை புன்னையி லொளித்துவிட்டாய்
　　பின்னே நடுக் கானகத்தில் பெண்களைத் தவிக்கவிட்டாய்
　　அன்னங்கேட்டு யக்ஞபத்னி
　　　　ஆனநன்பை நீ யொழித்தாய்
　　துன்னுகுழல் ஊதியெங்கள்
　　　　தூயமனதை யழித்தாய்　　　　2

துள்ளுமிளங்கன்றுகளை மெள்ளவே அவிழ்த்துவைத்தாய்
　　உள்ளிருந்த பாலுருட்டி ஓடிவந்தென்னையழைத்தாய்
　　　　அள்ளிவெண்ணை தன்னை எந்தன்
　　　　　　அங்கமெல்லாம் நீ துடைத்தாய்
　　துள்ளியோடி மாமியிடம்
　　　　　　தூருசொல்லிக் கோளுரைத்தாய்　　　　3

நாத்தியென முறைமைவிண்டாய் நானவளுக்கு மதனியொன்றுள்
　　பார்த்திருக்க மானபங்கம் பண்ணியவள் சேலைகொண்டாய்
　　　　தூர்த்தனடா உன்னை நாங்கள்
　　　　　　சேர்த்துமிந்த ஓடந்தன்னில்
　　ஏத்திக்கொண்டால் எங்களுக்கு
　　　　இடறு செய்வாய் எப்பொழுதும்　　　　4

நாடியிந்த யமுனையிலே வேடிக்கையாய் பெண்களெல்லாம்
மேடியுடன் லீலைசெய்து கூடிவிளையாடயிலே
ஆடவர்கள் பெண்களுடன்
கூடவந்தால் காதருக்கும்
போடா கண்ணு உங்கள் வீடு
தேடுவள் உன் அன்னையென்றுள்

## வேறு கும்மி 18

நின்றதொரு பாலகனை என்னும் மெட்டு.

பாலனென்று மனதிலெண்ணி கோபியர்கள்
பகர்ந்திடும் வார்த்தைதன்னை
நீலவர்ணன் கேட்டுமப்போ கோபியரை
நேசித்தொரு வார்த்தை சொல்வார் 1

என்னடியோ கோபியரே என்னை மிக
ஏசிமெத்தப் பேசுகிறீர்
முன்னமென்னை நினைத்தவர்க்காய் நான் செய்ததனை
மொழிகின்றேன் கேளடியோ 2

அன்னமீனொடாமையானேன் அடியவர்கள்
ஆசை தன்னைத் தீர்த்துவந்தேன்
பன்னியுடன் சிங்கமானேன் பக்தர்களை
பாங்குடனே காத்துவந்தேன் 3

ஓலமிட்டு யானை என்னை மூலமென
ஓடிக்காத்து வந்தேனடி
பாலன் சிருவன் தனக்கிரங்கி மேலான
பதவியும் தந்தேனடி 4

கல்லையும் பொன்னுக்கிவைத்தேன் மனமிரங்கி
காகத்திற்கும் கண் கொடுத்தேன்
வள்ளையெனக் காத்திருந்த சபரியெச்சில்
வாங்கியுண்டு மனங்களித்தேன் 5

இன்பமுள்ள யமுனைநதி ஓடந்தன்னில்
எந்தனையும் வத்திக்கொண்டால்
துன்பம் வந்து நேர்ந்துவிட்டால் உங்களையப்போ
அன்புடனே காத்திடுவேன் 6

சின்னஞ்சிறு பாலனல்லையோ உங்களுடன்
சேர்ந்துகூட வரவில்லையோ
இன்னமும் தயவுவல்லையோ எந்தனை ஓடத்
தேத்திடவுமனமில்லையோ 7

உங்களுடன் கூடிவந்த யுான் சிறுவன்
பொங்கும் யமுனைக்கரையில்
தங்கியிருப்பதை யறிந்தால் அன்னையசோதை
தண்டித்தென்னை அடித்திடுவாள் 8

## வேறு கும்மி 19

ஓடத்தின் ஏலப்பாட்டு மெட்டு.

கோவிந்தனும் கூறலுமே கோபி
கூடி ஒன்ருய் மனமிசைந்தார்
ஆவலுடன் கண்ணனையும் பெண்கள்
அழைத்தப்போ யமுனை வந்தார்.

முடுகு.

யெமுனநதிக்கரையில் எல்லவுரும் கூடி

அமைவாக அங்கிருக்கும் ஓடத்தை நாடி
சேலைதன்னைத்துக்கி கட்டினள் சிலபேர்
சேர்ந்தெமுனை யோடத்தை கிட்டினள் பலபேர்
கோலெடுத்தே யோடம் தள்ளினுள் சிலபேர் 1

கொண்டுவந்து கரைநிறுத்தி துள்ளினள் பலபேர்
ஓடத்தில் ஏறிக்கொண்டாடினள் சிலபேர்
கூடவே கண்ணனை நாடினள் பலபேர்
ஆவலுடன் ஓடத்தில் கண்ணனை சிலபேர் 2

அன்புடனே எத்தி மணிவண்ணனை பலபேர்
பாலகிருஷ்ண இங்கு பாரென்ருள் சிலபேர்
மூலையில் வந்து உக்காரென்ருள் பலபேர்
சிலம் செய்தால் இதோ ஓரென்ருள் சிலபேர் 3

சிக்ஷிக்க இது பெரிய கோலென்ருள் பலபேர்
நாடிநடு யமுனையை நாடினள் சிலபேர்
ஈடில்லை என்றகம் மூடினள் பலபேர்
நானென்றகம்பாவம் நாடினள் சிலபேர் 4

ஏனென்போல ஆரென்று பாடினள் பலபேர்
அன்னவனை நீயங்கு ஓரென்ருள் சிலபேர்
அகங்கொண்டு மிக நகைத்தாரென்ருள் பலபேர்
துன்னுமிவ்வோடமிக ஜோரென்ருள் சிலபேர் 5

என்னுடைய பாக்கியமிது பாரென்ருள் பலபேர்
நாடி அகம்மூடி நடு யமுனை தன்னைத்தேடி
ஈடில்லையென் ருடியே ராகம் பாடியே
கொண்டாடி வாரார் ஏலேலோ ஏலேலோ 6

## வேறு கும்மி 20

ஆதி சிதம்பரத்தே கிளியே என்னும் மெட்டு.

பாடியே யோடப் விடும் பெண்டுகளே
பாலகோபாலனப்போ
நாடி நயத்துடனே கோபியரை
நாதனும் பார்த்துரைப்பார் 1

அலையடிக்குதடி இவ்விடத்தில்
ஆழமதிகமடி
நிலையில்லையடியோ வோடந்தன்னை
நேரில் திருப்புமென்பார் 2

மச்சமுதலைபுடன் திமிங்கிலம்
மதிக்கும் மடுவடி
பச்யமதிக்கினிலே வோடந்தன்னை
பார்த்துத் தள்ளுமென்றார் 3

சுத்திசுழனுதடி வோடமிங்கு
சுழலதிகமடி
அத்திசைதிருப்பினல் உங்களுடை
ஆசைபோல் போகுமென்றார் 4

ஆசையாய்க் கோலெடுத்து தள்ளியிந்த
ஆழத்தில் வோடம்விட்டால்
மோசம்வருமடியோ கோபியரே
யோசித்துப் பாருமென்றார் 5

கோவிந்தன் கூறலுமே கோபியர்கள்
கூடியே கர்வங்கொண்டார்
கோபித்துக் கண்ணனைப் பார்த்தெல்லவரும்
கூப்பிட்டப்போதுவிண்டார் 6

## வேறு கும்மி 21

ராதாகிருஷ்ணனே என்னும் மெட்டு.

சரிபோதும் நீ யுக்திபுகலுவது
சாரசோர கிருஷ்ணா சரி 1

அனுபல்லவி.

உரியில் வெண்ணைபால் தயிர் உருட்டிக்
கொட்டுவதைப்போல்
ஓடம் விடுவதெண்ணினுய் பாலா சரி 2

சரணங்கள்.

மேட்டிமையாகவே மெல்லி கோபியர்கள் கோல்
நாட்டுமிவ் வோடந்தன்னை
மாட்டுடன் ஆடுகள் கூட்டங்கூட்டமாக நீ
ஒட்டி மேய்த்ததைப் போலே எண்ணினாய் சரி 3

பார்த்து மாதரெல்லோரும் சேர்த்துத்தள்ளிடுமிந்த
பாங்குள்ள வோடந்தன்னை
வேத்துப்பிடித்த சோதை விம்ம உரலில் கட்ட
சேத்திழுத்தோடினாப்போல் எண்ணினாய் சரி 4

மெத்தமதியுடைய சித்தி இடையர்கள் ஒரு
மித்த இவ் வோடந்தன்னை
நத்தை குத்தும் கெருடன் தொத்தைவானரத்தில் முன்
தொத்தி துரத்தினாப்போல் எண்ணினாய் சரி 5

## வேறு கும்மி 22

பெத்தெடுத்த தந்தை என்ற மெட்டு.

பொங்கு யமுனாநதியில் மங்கையர்கள்
ஓடமதில் கூடி
தங்கிநடு ஆறதனில் தாமோதிரன்
தன்னையவர் நாடி 1

கையைத்தட்டிக் கண்சிமிட்டி செய்கையினால்
ஜாடை மிகக்காட்டி
பையனிந்த பாலகிருஷ்ணன் பயப்படுகிறான்
பாரடி சீமாட்டி 2

வீட்டதனில் பெண்களுடன் வீண்பெருமை
பேசுவதில் தீரன்
ஆடவனாய் ஓடமதில் கூடவந்தும் கோல்
எடுக்கா வீரன் 3

வெண்ணை தயிர் பால்திருடி வயர்நிறைக்கும்
ஸத்வகுணசீலன்
தண்ணியினி லோடத்தை யவன் தள்ளுவனோ
சின்னஞ்சிறு பாலன் 4

மாட்டுடனே ஆடுமேய்த்து மாதர்கள்மேல்
சூது செய்யும் மாயன்
ஓட்டுவனோ நம்மைவைத் தோடமதை
சொந்தமாய் ஆயன் 5

மறைந்திருந்து வில்லெடுத்து மற்கடத்தின்
மார்பிளந்த மன்னன்
நிறைந்திருக்கு மோடமதை நேசமுடன்
கள்வனே சம்பன்னன் 6

செக்களித்துக் கெர்வங்கொண்டு கேலிபண்ணும்
கோபிபரைக்கண்டார்
அக்கணமே கண்ணனவ மானம்பண்ண
மனதில் எண்ணங்கொண்டார் 7

## வேறு கும்மி 23

### நூலாபீஸ் சிந்து மெட்டு.

மன்னு மகிழ்ந்து கேளுமே
மாதவன் ஓடத்தில் செய்தலீலை தன்னை மன்னு 1

சரணங்கள்.

மின்னார் கோபியர் மதத்தை மேகவண்ணன்
நன்னுயடக்கவெண்ணியவர் அகத்தை
உன்னிமனத்தோரிதத்தை யுகந்துயப்போ
உத்தமன் கோவிந்தன் ஒரு விந்தைசெய்தார் மன்னு 2

இந்திரன் தன்னைநினைத்தார் இவ்வேளையில்
இருண்ட மழைபொழி என்றுக்ஞாபித்தார்
மந்திரத்தால் மறைத்தார் மாயமதால்
மாதருக்குப்பாலனைப்போல் லீலைசெய்தார் மன்னு 3

அண்டமும் கிடுகிடென்னும் மேதினி
அதிர்ந்திடும் கடல்களோலமிடும்
எண்டிசைகளும் குலுங்கும் ஏழு
பர்வதங்களும் மிக நடுநடுங்கும் மன்னு 4

ஸப்தஸாகரத்திலுள்ள நீரதனை
முத்தக்குடித்த பெருங் காளமேகம்போல்
எத்திசைகளும் இருளும் எங்கினும்
இடியுடன் கொடிமின்னல் பறந்துவிழும் மன்னு 5

மண்வாரிக் காத்தடிக்கும் கோபியந்த
மங்கையர் கண்ணினை மறைக்கடிக்கும்
புண்ணாகி மனங்குழையும் ஓடம்
தண்ணீரில் நில்லாமல் தத்தளிக்கும் மன்னு 6

அண்டாத மழைபொழியும் ஆயர் இடைப்
பெண்டுகள் தங்களுடை மனமொழியும்
தண்டாமல் கோல் அழியும் இடம்
தண்ணீரில் நில்லாமல் தலைகவிழும் மன்னு 7

எண்ணாத எண்ணமெண்ணி எல்லவரும்
என்னசெய்வோமென்று மனதிலெண்ணி
பண்ணாத துதிகள் பண்ணி கோபியர்கள்
பாங்காய் பலதெய்வத்தை பிரார்த்திட்டார் மன்னா 8

## வேறு கும்மி 24.

பூசாரிப்பாட்டு சிந்தின் மெட்டு.

அல்லோகல் மாச்சுதிப்போ
அம்மாயமுனா தேவியரே
எல்லோரையும் கரை சேர்த்தால் நீரில்
எட்டுக்குடம் தேன் விட்டிடுவோம் 1

எம்பெருமான் கண்ணனுடன்
வனிதைகளக்கரை சேர்த்துவிட்டால்
சம்போசிவ சங்கரனே நோக்கு
கும்பாபிஷேகங்கள் பண்ணிவைப்போம் 2

குழகன்நந்த பாலனுடன் நாங்கள்
கூடியே அக்கரை சேர்ந்துவிட்டால்
பழனிவாழ் முருகேசா நோக்கு
பஞ்சாமிர்தங்களும் பண்ணிவைப்போம் 3

செங்கமலக் கண்ணனுடன் நாங்கள்
செவ்வியரக்கரை சேர்ந்துவிட்டால்
முக்குருணிப் பிள்ளையாரே நோக்கு
மோதகம்பண்ணியே நாங்கள் வைப்போம் 4

பாலனிந்தக் கண்ணனுடன் நாங்கள்
பாவையர் அக்கரை சேர்ந்துவிட்டால்
ஆலடிக்கருப்பா மருதைவீரா நோக்கு
ஆறுகுடங்கள்ளும் கட்டுக்கருப்பும் வைப்போம் 5

எல்லைப்பிடாரி பூங்காளி
எங்கள் குல மாரி ஆங்காரி
தொல்லையில்லாமல் கரைசேர்த்தால் நோக்கு
தள்ளுகுட்டியுடனே மாப்படைப்போம் 6

நெஞ்சங்குழைந்திந்த வஞ்சியர்கள்
நேசத்துடன் பல தெய்வங்களை
அஞ்சலி செய்துவர வேண்டவே ஓடத்தோர்
அற்புதமாச்சுது கேளும் மன்னா 7

## வேறு கும்மி 25.

### ஸ்ரீங்காரமானமீனும்பிகை மெட்டு.

கண்ட கண்ட பல தெய்வங்களை
கையெடுத்துத் தொழு தேத்தியப்போ
வேண்டித் துதிக்கையில் ஓடத்திலே யொரு
விந்தையுண்டாச்சுது கேளுமன்னு ஒரு 1

நாலுபக்கமு அலையடிக்க
நாலத்தில் ஓர் யந்திரம் வெடிக்க
நடுவில் பெரிய துவாரம் திறக்க
நங்கையர் கோபி மனம் பறந்தார் அந்த 2

ஓடமதனில் ஜலம் நிறைய
உத்தமியாடைகளும் நனைய
கூடவந்திருக்கும் கோவிந்தனை வந்து
கோபியர் அப்போ அணைந்துனைந்தார் அந்த 3

பங்கயக் கண்ணனே என்ன செய்வோம்
மங்கையருன்னுடன் மாய்ந்திடவோ
பொங்கும் யமுனை நடுவினிலே ஓடம்
தங்கித் தவிக்குதே என்ன செய்வோம் நாங்கள் 4

மின்னல்கள் கண்ணைப் பறிக்குறதே
மேகங்கள் எங்கும் மறைக்கிறதே
துன்னுமழையினல் அங்கம் தளைக்குதே
தூயவனே இப்போ தென்ன செய்வோம் நாங்கள் 5

காத்தில் உடல் நடுங்குறதே
கைகால்களும் பதைக்குறதே
சேத்திழுக்குதே ஜலத்தில் ஓடத்தை
செங்கனிவாயனே என்ன செய்வோம் நாங்கள் 6

அஞ்சிப்பயந்து மிகநடுங்கி
வஞ்சிக் கோபியர் அகம் ஒடுங்கி
கஞ்சமலர்க்கண்ணன் தன்னை வணங்கியே
நெஞ்சங்குழைந்து புலபுகிறுர் 7

## வேறு கும்மி 26.

### தையலரே கேளடியோ மெட்டு.

நந்தனருமைப்பாலனே வந்தனம் செய்வோர் லோலனே
உந்தன் சொல்லைக்கேளாமலே இந்தக்கதியானேமையா
ஐயனே ஐயனே
துய்யனே மெய்யனே நந்த

தோழியருடனே கூடவாழ்வினை இழந்துவிட
ஆழிவண்ணா உன்னைக்கூட்டி பாழும யமுனை நாடியே
வந்தோமே வந்தோமே
நொந்தோமே நைந்தோமே நந்த 2

மெத்தவும் தவம்புரிந்து உத்தமி யசோதை நொந்து
பெத்தெடுத்த பாலகனே உன்புத்தியினைக்கேளாமலே
போயினோம் போயினோம்
நாயினும் ஆயினும் நந்த 3

இத்தருணம் காருமையா உத்தவினை தீருமையா
இத்தனை பேரும் பிழைக்கும் புத்திசொல்லித்தாருமையா
மாயனே மாயனே
தூயனே நேயனே நந்த 4

மங்கையரெல்லோரும் வந்தோம் சங்கைவினையாலே நொந்தோம்
எங்கிலும் கதியன்னியில் உன் பங்கைய பதமடைந்தோம்
பாருமே பாருமே
காருமே நீருமே நந்த 5

## வேறு கும்மி 27.

### தங்கப்பாட்டு மெட்டு.

அஞ்சியே நடுங்கி நெஞ்சகமடங்கி
வஞ்சியரொடுங்கி கஞ்சமலர்க் கண்ணனையே
பெண்களெல்லாம் தஞ்சமென்றடைந்தாரப்போ 1

பக்தபரிபாலன் சுந்தரனுகூலன்
உத்தமியர் லோலன் மெத்தவு மனம்மிரங்கி
கோபியர்க்கோர் யுக்திசொன்னார் கேளுமன்னா 2

கோபியரே பாராய் அவனுடன் ஓராய்
நாவமெங்கும் நீராய் மேவிவரும் துவாரம் உங்கள்
ரவிக்கையினால் பாவையரே மூடுமென்றார் 3

கண்ணனுரை கேட்டார் உண்மையென்றுள்பட்டார்
பெண்மணிகள் தொட்டார் வண்ணவண்ண ரவிக்கையினால்
கோபியர்கள் தண்ணிவரும் வழியடைத்தார் 4

பஞ்சவர்ணக்கோலப் பட்டுடனே நீல
மஞ்சளுடன் சால ரஞ்சித ரவிக்கைகளால்
துவாரமதை வஞ்சியரெல்லோரு மூடினார் 5

சங்கையுடன் கூடி மங்கையர்கள் நாடி
கொங்கையினில்மூடி தங்கியிருக்கும் ரவிக்கைகொண்டு
அனைவர்களும் துவாரமதை மூடலுமே 6

## வேறு கும்மி 28.

### தெம்மாங்கு சிந்துமெட்டு

ஓடமதின் துவாரமுன்னே மூடப்பெண்கள் ரவிக்கை தன்னை
போடப்போட யமுனைகொண்டு போகிறதை கோபியர்கள்
பார்த்து மிகப்பயந்து பாலகிருஷ்ணனை நயந்து
சேத்தணைந்து வியந்து சேவடிதனில் அடைந்து
கண்ணனே என்ன செய்வோம் வண்ணரவிக்கையெல்லாம்
தண்ணிகொண்டு போகிறதே தாமோதிரா காருமென்றார்
பாரும் மஹீபாலா பரிக்ஷித்தெனும்சிலா பாரும் 1

கேட்டுக்கண்ணன் மனம் துடித்து வாட்டமுள்ளார் போல்நடித்து
கூட்டுமப்போ கோபியரோடு கோவிந்தனோர் வார்த்தை சொல்வார்
பாரடி பெண்மயிலே ஓரடி உண்மையிலே
தேரடி ஓ—மதில் நீரதையடைத்துவிட
உங்களறைச் சேலைதன்னை சங்கையில்லாமலடைத்தால்
மங்கையரே ஓரிடத்தில் நீர் மட்டுபடுமென்றுரைத்தார்
பாரும் மஹீபாலா பரிக்ஷித்தெனும் சிலா பாரும் 2

கண்ணன் சொன்ன வார்த்தையந்த பெண்மணிகள் கேட்டுமெத்த
எண்ணங் குழைந்தேங்கி மணிவண்ணனையும் பார்த்துரைப்பார்
மானம் பெரிதல்லவோ மாதவா மாதருக்கு
ஈனம் இதனைசெய்யோம் ஏழைகளைக் காக்கவேணும்
மாயனே போற்றி அதி தூயனே போற்றி எங்கள்
ஆயனே போற்றி வேறுபாயம் நீர் சொல்லுமென்பார்
பாரும்மஹீபாலா பரிக்ஷித்தெனும் சீலா பாரும் 3

மத்தொரு உபாயம் நீரே மாதர்களே கேழ்க்குறீரே
சத்துமறியாத பாலன் நான் இத்தருணம் என்ன செய்வேன்
ஆகாசம் பூமிமுதல் அகிலபுவனங்களும்
ஏகமாயிருள்மூடி இருக்குமிவ்வோடத்துக்குள்
யாசறிவார் உங்களுக்கு ஆடையில்லை என்பதனை
நேறிழையே சேலையிந்த நிமிஷத்தடையுமெனபார்
பாரும் மஹீபாலா பரிக்ஷித்தெனும் சீலா பாரும் 4

## வேறு கும்மி 29.

### குட்டிக்குரங்கே நில் எனனும் மெட்டு.

தப்பிக்கும் வழி தேடினாள் மாதரெல்லோரும்
ஒப்பி ஒன்றாகக்கூடினாள் தப்பி 1

அனுபல்லவி.

எப்படியாகிலும் நாம் எல்லோரும் பிழைப்போமென்
றெண்ணிக் கண்ணன் மொழியை நண்ணி கோபியர் எல்லாம்

சரணங்கள்.

பாரும் இருண்டதென்றாள் இங்கினில் நம்மை
யாரும் அறியாரென்றாள்
தேரும் நினைவடைந்து தேவி எல்லோரும் சேர்ந்து
தேடியோடத்தின் துவாற மூடி எல்லோரும் கூடி தப்பி 3

பட்டுப்புடவை யவிழ்த்தாள் துவாறமதனில்
விட்டுப்பிகிஞ்சியடைத்தாள்
நட்டுத்தலைகுனிந்து நாணியகங்குழைந்து
நாடிக்கண்ணன் அருளைத் தேடி கோபியர்கூடித் தப்பி 4

அத்தினை பெருங்கூடினாள் சேலைகள் கொண்டு
குத்திக்குத்தியே மூடினாள்
சுத்தியமுனைக்குள்ளே பத்தியிழுக்கக்கண்டு
சொக்கி மனம் மிகவும் வெக்கித்துக்கிக்கவிழ்ந்து தப்பி 5

பச்சைப்புடவை ஈய்ந்தாள் துவாறமடைத்து
லச்சையுடனே ஓய்ந்தாள்
கச்சை சேலைகள் ஒன்றும் மிச்சம் இல்லாமல் போக
கண்டுகோபியர் மனம் விண்டு விசனங்கொண்டு தப்பி 6

எல்லோரும் பங்கமானாள் ஓடமதற்குள்
அல்லோகலமாய்ப் போனாள்
நல்லோர்க்கருளும் ஜகநாதன் கண்ணனைக்கண்டு
நாணித்தலைகுனிந்து பாணியினால் மறைத்து தப்பி 7

## வேறு கும்மி 30

வண்டிக்கால் சரிதம் திருவளர்பாகா மெட்டு.

பங்கையமதிமுக மங்கையர் கோபியர்
பஞ்ஜாடைகளை யனைத்தும்
பொங்கி யமுனை அலை எங்கினுமோதியே
போட்டுமே நீரினில் அமுத்தும் 1

கண்டுபயந்து கவலையால் கோபியர்
கலங்கிடும் வேளையில் மேக
மண்டலந்தன்னில் இருள் நீங்கி வெளி பறந்து
மழைபுடண்டி நின்று போக 2

ஆகாசந்தன்னில் இருள் நீங்கி வொளிதிகழ்ந்து
ஆதவன் ஒளி மிக ஓங்கி
ஏக வெளிச்சமாய் போகவே மாதர்கள்
எல்லவரு மனமேங்கி 3

அக்கணமாதர்கள் வெக்கமடைந்தார்
அயனெழுத்தென மிக நொந்தார்
துக்கமுடனே மனம் விக்கியே நைந்தார்
துறை கண்ணன் பாத மலரடைந்தார் 4

## வேறு கும்மி 31

அம்பலத்தை நாடிவந்தேனே மெட்டு.

இந்த வேளை என்ன செய்குவோம் ஏதுகுலேசா இந்த 1

சரணங்கள்.

இந்த வேளை ஏதுசெய்குவோம் உந்தன் பாதம் போத்தி உய்வோம்
சிந்தை குறைதீருமையனே ஸ்ரீரமணா இந்த 2

மாமி மாமன் மக்களுத்தார் மைத்துனர்கள் வருகுமிடத்தில
மானபங்கமாயினோமையா மாரமணா இந்த 3

உந்தன் தந்தை நந்தருடன பந்தும்த்ரர் இதையறிந்தார்
நிந்தைக்கிடமாகு மையனே நீலவர்ணா இந்த 4

அஞ்சாமல் காருமையா ஆடை இப்போ தாருமையா
பாஞ்சாலி மானங்காததிடும் பாலகிருஷ்ணா இந்த 5

## வேறு கும்மி 32

ஆப்பிரிக்கா துவாறகா மெட்டு.

கண்ணனே மணிவண்ணனே காருமே வினை தீருமே கண்ண 1

சரணங்கள்

வண்ண ஆடைகள் எண்ணிலாததை தண்ணீரிழுத்ததை ஒருமே
எண்ணங்குழையுதே ஏங்கிவாடுதே புண்ணியா திருப்பாருமேழ 2

தீனயாகினோம் மானம் போயினோம் தீனர்களுக்கனுகூலனே
ஆனை வினையினை தீததுக்கார்த்திட்ட ஐயனே ஆதிமூலனே க 3

கூவிமேவிடும் பெண்கள் மீதினில் கொஞ்சமும் தயை வல்லையா
பாவை பாஞ்சாலி மானங்காத்திடும் பக்த்தவஸ்தனல்லையா க 4

துஷ்ட காளியின் மீதிலாடிய தூயனே வெகு மாயனே
கஷ்டப்படுமெங்கள் வினையைத்தீர்த்து கார்த்திரக்ஷியும்நேயனே க

## வேறு கும்மி 33

### கும்பேனியாங் கூட்டங்கூடி மேட்டு.

ஏ.த்தமி கோபியர் மொழி மலர்கண்ணன்
சித்தமதில் வாஙகியப்போ மணிவண்ணன்
ப ந்தர் துயர் சகியாத ஒரு எண்ணன்
அத்தருணம் அருள்புரிந்தார் ஆழிமன்னன் 1

அநேசுக் கெஞ்சும் வஞ்சியர் மேல் எங்களாயன்
நெஞ்சிறங்கி யருள்சிறந்து மிகநேயன்
சஞ் சலங்கள் தீர்க்கவெண்ணி யேயுமுபாயன்
அஞ்சமலர்க்கரமதினுல் அதிதூயன் 2

சேலையுடன் ரவிக்கைகளும் மலர் கண்ணன்
மாலையுடன் சந்தணமும் மணிவண்ணன்
வேலையொக்கும் யமுனையிலே அருளெண்ணன்
யன்பாலே மாதர்களுக்களித்தார் ஆழிவண்ணன் 3

சி டமதின் துவாரம் தன்னை மிகநேயன்
மூடிடவே மனமகிழ்ந்து அதிதூயன்
கூட ப்பெண்கள் கரம்பிடித்து வெகுமாயன்
கூடிப்பாடிக் களித்துகந்தார் எங்களாயன் 4

தெ ன்பு சொல்லி யருள்நாடி மலர் கண்ணன்
இன்பமுடன் கூடிநாடி மணிவண்ணன்
நன் குட்னே விளையாடி அருளெண்ணன்
அன்புடனே களித்தாடி ஆழிவண்ணன் 5

## வேறு கும்மி 34.

### ஆதிமூல மைன் தேவ மேட்டு.

சேலை புடுத்தி கோபி கண்ணனைசசேர்ந்து கூடினுள்
வேலை படுத்த நீலவண்ணனைக் கேலிப் பாடினுள்
மாலை தொடுத்து மாலையடுத்து மாலை சூடினுள்
கோ லாகலமாய்க் கொண் டாடினுள் 1

இந்துவதன சுந்தரியருகந்து கூடினுள்
நந்தகோபவர குமாரன் தன்னை நாடினுள்
கந்தமுள்ள சுகந்த கெந்தம் பூசிப் பாடினுள்
மந்தகாசமாய்க் கூத் தாடினுள்

மெத்த மகிழ்ந்து கண்ணன் கரத்தைப்பத்தி கூடினுள்
ஒத்த சுருதிகள் கூட்டி சிலர்களுகந்து பாடினுள்
மத்தளங்கொட்ட மங்கையர் பலர்மகிழ்ந்து நாடினுள்
தத்தளங்குதோம் என் ருடினுள்

எங்களைப்போல் தன்மை யாரென்றெண்ணி நாடினுள்
பங்கஜாக்ஷன் கண்ணன் தயவைப்பகர்ந்து பாடினுள்
அங்கமுருகிப் பொங்கி மகிழ்ந்து மங்கை கூடினுள்
மங்களங்கள் அங்கு பாடினுள்

## வேறு கும்மி 35

வந்தனங்கள் செய்குவோம் மெட்டே.

1. மங்களம் ஜெயமங்களம் எங்களுக்கருள் கண்ணனே
 கங்கைதிகழும் பங்கையமலர்ப்பாதனே மணிவண்ணனே

2. நந்தவறகுமாரனே நாறியர் மனசோரனே
 சுந்தர அரிவிந்தநயன சூரனே சுகுமாரனே

3. கோகுலந்தன்னில் வாசனே கோபியர் மனநேசனே
 ஆகுலங்கள் தீர்த்த எங்கள் அன்பனே ஜகதீசனே

4. பொங்கிடும் புனல் தங்கிடும் புகழ் பொன்னரங்கநாதனே
 மங்கை ரங்கநாயகி மகிழ் பங்கய மலர்ப்பாதனே

## நௌகாசரிதமென்னும்

கண்ணன் லீலை காக்ஷி ஒடக்கும்மி

முற்றிற்று.

# விளம்பரம்.

ஸ்ரீரங்கம் ரங்காயகி அம்மாளால் இயற்றிய புஸ்தகங்கள்

| | | ரூ. அ |
|---|---|---|
| நூற்றியெட்டுத் திருப்பதி கீர்த்தனை 1-க்கு | ... | 0–12 |
| துளஸி மஹாத்மிய கீர்த்தனை 1-க்கு | ... | 0–6 |
| தொண்டரடிப்பொடியாழ்வார் சரித்திரக்கீர்த்தனை 1-க்கு | | 0–6 |
| வத்ஸலா கல்யாணக்கும்மி 1-க்கு | ... | 0–5 |
| ருக்மணி கல்யாணக்கும்மி 1-க்கு | ... | 0–5 |
| திருமங்கை ஆழ்வார் சரித்திரக் கும்மி 1-க்கு | ... | 0–4 |
| ஸத்ஸம்பிரதாய பஜனைப்பத்ததி | ... | 0–4 |
| நௌகாசரித்திரக்கும்மி என்னும் காஷ்டிபோடக்கும்மி 1-க்கு | | 0– |
| கோதை பரிணயக்கும்மி 1-க்கு | ... | 0– |
| கோபிகா வஸ்திராபஹரணக்கும்மி 1-க்கு | ... | 0– |
| எட்டுபத்தினிகள் சரித்திரக்கும்மி 1-க்கு | ... | 0– |
| அநஸூயா சரித்திரக்கும்மி 1-க்கு | ... | 0– |
| நம்மாழ்வார் சரித்திரக்கும்மி 1-க்கு | ... | 0– |
| ஸ்ரீரங்கநாதன் பள்ளியறைக்கீர்த்தனை 1-க்கு | ... | 0– |
| தேரழுந்தூர் சுவாமி கும்மி 1-க்கு | ... | 0– |
| ஸ்ரீரங்கம் வழிநடைக்கும்மி 1-க்கு | ... | 0– |
| சம்மந்தியேசல் 1-க்கு | ... | 0– |
| வேதாந்த தேசிகர் வைபவப்பிரகாச வழிநடை சிந்து | ... | 0– |

இவைகள் வேண்டியவர்கள் ஸ்ரீரங்கம் வடக்குச்சித்
1195 நெ வீட்டில் பெற்றுக்கொள்ளலாம். வி. பி. மூ
அனுப்பப்படும்.

## ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெ
மேல்கண்ட புஸ்தகங்கள் யாவும் ஷை ஸ்ரீரங்கம் ரங்கநாயகி
ளால் இயற்றப்பட்டு காப்பிரைட் செய்யப்பட்டிருக்கிறது. இ
நாயகி அம்மாளால் ஷை ஸ்ரீரங்கம் வடக்குச்சித்திரை வீதி 1
நெ. வீட்டிலிருக்கும் ரங்கநாயகி அம்மாளுக்கு சகலசுதந்
கொடுத்துவிட்டபடியால் இவர்களுடைய அனுமதியில்லா
ரேனும் எவ்விதத்திலாகிலும் அச்சிடலாகாதென சட்டப்
ரிஜிஸ்டர் காப்பிரைட் செய்யப்பட்டிருக்கிறது. ஆனதால்
ளுடைய உத்திரவின்றி யாரேனும் அச்சிட்டால் அதனால் வ
எவ்வித நஷ்டத்திற்கும் பாத்தியப்பட நேரிடும் என்பதை அ